**கொழும்பு பெரும்பாக கழிவுநீர் முகாமைத்துவ செயற்திட்டம் - 2018**

கொழும்பு பெரும்பாக கழிவு நீர் முகாமைத்துவ செயற்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடிபீ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2009 திசெம்பர் 18 ஆம் திகதிய 2557/2558 எஸ்ஆர்ஜ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் II ஆவது உறுப்புரையின் 2.09 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வெண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன**

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், உள்நாட்டு மற்றும் உள்ளக விவகார மற்றும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் கொழும்பு மாநகர சபை கொழும்பு மாநகர பகுதிக்குள் வேலைகளை அமுலாக்குவதற்காக பொறுப்பாகவுள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை கொலன்னாவை நகர சபை மற்றும் தெகிவளை/ கல்கிசை மாநகர சபை பகுதிக்குள் வேலைகளை அமுலாக்குவதற்காக பொறுப்பாகவுள்ளது. தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மீதான என்னுடைய அவதானிப்புக்களை இந்த அறிக்கை கொண்டுள்ளது. கழிவு நீர் முகாமைத்துவ சேவைகள் ஊடாக கொழும்பு பெரும்பாகத்தில் நகர மற்றும் புறநகர்களில் வசிக்கின்றறோருக்கான நகர சுற்றாடல் மற்றும் பொது மக்கள் சுகாதாரத்தை முன்னேற்றுவதே செயயற்திட்டத்தின் நோக்கங்களாக உள்ளன. செயற்திட்ட பகுதிக்குள் ஏறத்தாழ 645,000 வசிக்கின்றவர்களிற்கு கழிவு நீர் முகாமைத்துவத்தினை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட விளைவாக உள்ளது. கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 13,410 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 116.60 மில்லியன் ஆக உள்ளதுடன் அதில் ரூபா 9,200.8 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 80 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியின் சாதாரண மூலதன வளங்களால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டதுடன் ரூபா 2,300.20 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 20 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியின் விசேட நிதிய வளங்களால் நிதியளிப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டதுடன் மிகுதி தொகை ரூபா 1,909 மில்லியனிற்கு சமமான அல்லது 14.3 சதவீதம் ஐ.அ.டொலர் 16.60 மில்லியன் இலங்கை அரசாங்கத்தால் பங்களிப்புச் செய்யப்பட வேண்டும், அதில் மேற்குறிப்பிடப்பட்ட செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 1,731.70 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 12.60 மில்லியன் தொகை தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளிற்கு ஒதுக்கப்பட்டிருந்தது. மேலும், மானியமாக 82.5 சதவீதம் மற்றும் கடனாக 17.5 சதவீதம் பிரித்து கடன் பெறுகைகளில் ரூபா 647.68 மில்லியனிற்கு சமமான (ஐ.அ.டொலர் 5.64 மில்லியன்) எஸ்டிஆர் 3.6 மில்லியன் வழங்குவதற்கு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கும் இடையே 2010 யூலை 02 இல் துணைநிலை நிதியளிப்பு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் மிகுதித் தொகை ரூபா 364.35 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 3.17 மில்லியன் இலங்கை அரசாங்கத்தால் நிதியளிப்பதற்கு உடன்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2009 திசெம்பர் 18 இல் தொடங்கியிருந்ததுடன் 2014 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. பின்னர், செயற்திட்டத்தின் பூர்த்தியாக்கல் திகதி 2017 மார்ச் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் தொடர்ந்திருந்ததுடன் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

என்னனுடைய அறிக்கையின் அட்டவணை 02 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர, 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கையில் முகாமைத்தவமானது தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவாக தொருவதற்கு, பிரயோகிக்கக் கூடியவையாக வெளிப்படுத்தல், தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவுடன் தொடர்புபட்ட விடயங்கள் மற்றும் செயற்திட்டத்தின் திரவத்தன்மைக்கு முகாமைத்துவம் அல்லது குறித்த தரப்பினர் கணக்கீட்டின் தொடர்ந்து செல்லும் அடிப்படையை பயன்படுத்தல் அல்லது நெகிழ்ச்சித் தன்மையுடைய மாற்றுவழியை உருவாக்கல் அல்லது வைத்திருத்தல் ஆனால் அதேபோல செய்வதற்கு ஏற்றவாறு செயற்திட்டத்தினை மதிப்பிடுவதற்காக பொறுப்புடையது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்கள் இயலக்கூடியவாறு சகல வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பவற்றின் முறையான புத்தகங்கள் மற்றும் ஏடுகள் பேணுவதற்கு செயற்திட்டம் வேண்டப்பட்டள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

**2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.1. கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்கீட்டுக் குறைபாடுகள் | ரூபா மில்லியன் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் சிபார்சுகள் |
| --- | --- | --- | --- | --- |
| (அ) 2018 திசெம்பர் 31 வரை செலுத்தப்பட்ட பெறுமதி சேர் வரி இலங்கை அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட பங்களிப்புகளிற்கு எதிராக சரிசெய்யப்பட்டிருந்தது | 72.19 | அரசாங்கத்திடம் இருந்து பெறப்பட்ட பங்களிப்பின் குறைத்தக் கூறல் | செலுத்தப்பட்ட பெறுமதி செர் வரி அரசாங்க நிதிக்கு எதிராக சரிசெய்யப்பட முடியும் | பெறப்பட்ட தேறிய பங்களிப்பிற்கு பதிலாக இலங்கை அரசாங்கத்திடம் இருந்தான மொத்த பங்களிப்புகள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டுமென வேண்டப்பட்டது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு விசேட (டொலர்) கணக்கில் இருந்த மீதி நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை | 22.22 | ஆண்டு இறுதியில் காசு மற்றும் காசிற்கு சமமான மீதிகளின் குறைத்தக்கூறல் | முறைப்படி கருத்து தெரிவிக்கப் பட்டிருக்கவில்லை. | விசேட (டொலர்) கணக்கில் இருந்த மீதி நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட வெண்டும். |
| (இ) | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நடைபெறும் வேலை ரூபா 10.45 மில்லியனாகும். எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் நடைபெறும் வேலைகளின் நேரொத்த பெறுமதி ரூபா 1.17 மில்லியன் ஆகும். | | உள்ளக கட்டுப்பாட்டின் நலிவுகள் | கருத்து தெரிவிக்கப் பட்டிருக்கவில்லை. | கால ரீதியாக மீதிகளை இணக்கம் செய்யப்பட வெண்டும். |
| (ஈ) | ரூபா 198.15 மில்லியன் கூட்டுத்தொகையான மீளளெடுப்பு விண்ணப்பங்களில் ஒப்பந்தகாரரால் சமர்ப்பிக்கப்பட்ட விலைப் பட்டியல்களிற்கான தொடர்புபட்ட சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | | சான்றுகள் போதாமையால் கொடுக்கல் வாங்கல்களை ஆதாரப்படுத்த முடியவில்லை. | கருத்து தெரிவிக்கப் பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் தொகைகள் மெய்மையாய்வு செய்வதற்கு ஆதாரமான ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னெற்றம்

செயற்திட்டமானது 2014 ஆகஸ்ட் மாதத்தில் ரூபா 1,028 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 7.79 மில்லியனில் தெகிவளை கல்கிசை மற்றும் கொலன்னாவ பகுதிகளில் 06 கழிவுநீர் இறைக்கும் இல்லங்கள் புனரமைப்பதற்கான ஒப்பந்தத்தை வழங்கியிருந்ததுடன் 2016 திசெம்பர் அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென ஆரம்பத்தில் பட்டியலிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்டமானது 2017 மார்ச் 30 வரை ஒப்பந்த காலப்பகுதியை நீடித்திருந்தது. செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்டிருந்த பொதிலும் ஒப்பந்தகாரருடன் எழுந்த தகராறு காரணமாக 2019 மே 30 வரையும் புனரமைப்பு வேலைகள் மீதான இறுதி விலைப்பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

பின்வரும் அவானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | நடவடிக்கை | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் சிபார்சு |
|---|---|---|---|---|
| (அ) | செயற்திட்டத்தின் காலப்பகுதி 2017 திசெம்பர் 31 இல் முடிவுறத்தப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்ட போதிலும் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை கணக்கொழிப்பு செய்வதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்காததுடன் இறைக்கும் இல்லங்களின் நிர்மாணத்தில் ஈடுபட்டிருந்த ஒப்பந்தகாரரால் எழுந்த நடுவர் தீர்ப்பு விடயம் காரணமாக நிறைவெற்றல் மற்றும் அமுலாக்கல் முகவர்களிற்கு சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை கையளித்திருக்கவில்லை. | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இருந்த செயற்திட்டத்தின் நிலைமை நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப் பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை கணக்கொழிப்பதற்கு நிறைவெற்றல் முகவரால் அறிவுறத்தல்களை வழங்கப்பட வெண்டும். |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 133 மற்றும் 2016 யூன் 10 ஆந் திகதிய 02/2016 ஆம் இலக்க முகாமைத்தவ கணக்காய்வு சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம், மீளாயவாண்டின் போது செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்கள் உள்ளக கணக்காய்விற்கு உட்படுத்தப் பட்டிருக்கவில்லை. | உள்ளக கட்டுப்பாட்டு முறைமை நலிவாக உள்ளது | -மேற்படி- | செயற்திட்ட நிதிகள் ஆக்கபூர்வமான வழியில் பயன்படுத்தியதை உறுதிப்படுத்துவதற்கு உள்ளக கணக்காய்வாளரின் சேவை பெறப்பட வெண்டும். |
| (இ) | செயற்திட்டத்தில் நடவடிக்கைகள் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முடிவுறுத்தப்பட்ட போதிலும் செயற்திட்ட பூர்த்தியாக்கல் அறிக்கை தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. | செயற்திட்ட நடவடிக்கைகளின் குறைபாடுகளை அளவீடு செய்ய முடியாதுள்ளது. | -மேற்படி- | செயற்திட்ட காலப் பகுதியின் இறுதியில் செயற்திட்ட பூர்த்தியாக்கல் அறிக்கை தயாரிக்கப்பட வேண்டும். |